28 அக்டோபர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 30ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**தடைகளைக் கடந்து கிறிஸ்துவோடு பயணிக்கிறேன்**

# பர்த்திமேயு போல் ‘பார்ப்பது’ ...நமது நம்பிக்கை



இன்றைய நற்செய்தி (மாற்கு 10:46-52) நம்பிக்கை சீடராக இருப்பது பற்றிப் போதிக்கிறது.

பர்த்திமேயு குருடர், பிச்சை எடுத்து பிழைப்பு நடத்திய வந்த அவர், பார்வை பெற துடித்தார். ஆயினும் நாதியற்று இருந்தார். ஆனால் நம்பிக்கையை இழக்கவில்லை. குணம் பெறக் காத்திருந்தார். அந்த சுற்றுவட்டாரத்தில் இயேசு வருகிறார் என்பதை அறிந்து, உரத்தக் குரலில் அழைத்தார், “இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்”. கூட்டத்தின் நெரிசலும் அதட்டலும் பர்த்திமேயுவைத் தடுத்து நிறுத்தவில்லை.

நாமும், எதிலும் மெய் பொருள் காணாமல் ஆன்மீகக் குருட்டுத்தனத்தாலும், பாவப் பிடியில் சிக்குண்டு, நாதியற்றவர்களாகவும் இருக்கிறோம். எவ்வளவு சிரமமான சூழ்நிலையில் நாம் இருந்தாலும் நம்பிக்கையை இழக்கக்கூடாது, விடாமுயற்சியையும் கைவிடக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ளள நமது விசுவாசத்தை பலர் எதிர்க்கக்கூடும் ஏளனமாக பேசக்கூடும், பர்த்திமேயுவை நினைத்துப் பார்த்து, விசுவாசத்தில் தளராமல் செபத்தில் நிலைத்திருப்போம்.

ஆன்மீகக் குருட்டுத்தனத்தால் நாம் இருந்து வந்த பாதையை நினைத்துப் பார்ப்போம். இயேசுவின் அழைப்புக்கேற்ப அவரது சீடராக இருப்பதில் தடைக்கல்லாக இருக்கும் நமது மனப்பான்மையையும், பழக்க-வழக்கத்தையும், நம்பிக்கையையும் ஆராய்ந்து பார்ப்போம்.

உங்கள் சமூகத்தில், வேலையிடத்தில், ஏழை-எளியோர் அல்லது ஒதுக்கப்பட்டோர் மத்தியில் கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணரத் தடுக்கும் உங்களது ஆன்மீகக் குருட்டுத்தனத்தை ஆராய்ந்து பாருங்கள். **பிறருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென இயேசு உங்களை அழைக்கிறார்?**

இறுதியில் இயேசு அழைக்கும் போது பர்த்திமேயு அடைந்த ஆனந்தத்தையும் அமர்க்களத்தையும் புனித மாற்கு அழகாக விளக்குகிறார். “அவரும் தம் மேலுடையை எறிந்து விட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார்.” உடனடியாக அவர் காட்டிய துடிப்பும் ஆற்றலும், ஒவ்வொரு சீடரிடமும் இருக்க வேண்டிய ஆர்வத்தின் அடையாளமாகும்.

“உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” என்ற இயேசுவின் கேள்விக்கு எவ்வாறு நீங்கள் பதில் அளிப்பீர்கள். ஆண்டவர் அழைக்கும் போது ஆர்வத்தோடு பதில் அளிக்க நாம் தயாராகயிருக்க வேண்டும்.

பர்த்திமேயு மீண்டும் முழு பார்வை பெற்று, இயேசுவைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.

இறையருளுக்கு நமது உள்ளத்தைத் திறக்கும் போது, சுதந்திரத்தோடும் மகிழ்ச்சியோடும் இயேசுவைப் பின்பற்றிச் செல்வதற்கு நம்மை சில சமயங்களில் தடை செய்யும் ஆன்மீகக் குருட்டுத்தனத்திலிருந்து குணம் பெற முடியும். இயேசுவின் குணமளிக்கும் பணி, பாவ அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமான ‘புதிய சீயோனுக்கு’ (முதல் வாசம் எரேமியா 31:7-9) நம்மை கடத்திச் செல்லும் ✝

> **இறைவார்த்தையை ஒட்டுமொத்தமாக ஏற்றுக் கொள்வதில் மட்டுமல்லாது அதனைப் பேணிகாத்துக் கொள்வதில்தான் நமது முழு செயலாக்கமும் அடங்கியுள்ளது**
>
> - புனித பிரான்சிஸ் டி செல்ஸ்

**வாரம் ஒரு வசனம்**

**பிறருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென இயேசு உங்களை அழைக்கிறார்?**

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

# மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் புனிதத்துவத்துக்கு அழைப்பு***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>: பொதுக்காலம் 30ஆம் ஞயிறு** சனி 27-10-2018 - ஞாயிறு 04-11-2018

எரே: 31: 7 - 9 தி.பா: 125: 1- 2ab, 2cd - 3, 4 -5, 6 எபிரேயர்: 5: 1 - 6 மாற்கு: 10: 46 - 52

**"ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்" - திபா 125**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சனி | 27 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/ நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி (புனித ரபேல்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை | | |
| ஞாயிறு | 28 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (அன்னை வேளாங்கண்ணி)<br>திருப்பலி (ஆ) (புனித டேவிட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) | | |
| திங்கள் | 29 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* | | |
| செவ் | 30 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* | | |
| புதன் | 31 | 6.45 கா | திருப்பலி | | | |
| வியா | 01 | அனைத்து புனிதர்கள் | | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | | 01-11-2018 | | காலை 7.30 (கார்மேல் மடம்) | பகல் 2.00 (கம்போங் செபிர்) | மாலை 4.30 (தித்தி) |
| வெள் | 02 | அனைத்து மரித்தோர் நினைவு | | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | | நாள்: 02-11-2018 | | காலை 7.30 (கார்மேல் மடம்) | | |

**பொதுக்காலம் 31ஆம் ஞயிறு**

இ.ச: 6: 2 - 6 தி.பா: 17: 2- 3a, 3bc - 4, 47, 51ab எபிரேயர்: 7: 23 - 28 மாற்கு: 12: 18 - 34

**"என் ஆற்றலாகிய ஆண்டவரே ! உம்மிடம் நான் அன்புகூர்கிறேன்" - திபா 17**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 03 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/ நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி (புனித மார்த்தாள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 04 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (முகிபுவ ஆசிரியர்கள்)<br>திருப்பலி (ஆ) (புனித மார்ட்டின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## <u>2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>

i) **ஆலய காணிக்கை**
20 &21அக்டோபர் **உலக தூதுப்பணி ஞாயிறு** ரிம:8,995.00
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

ii) வின்செண்ட் டி போல் இயக்கத்தினர் வெளியிடும் 2019 ஆம் ஆண்டுக்கான நாட்காடி விற்பனையில் உள்ளது. விலை ரிம:12.00 வாங்கி ஆதரவு தாருங்கள்.

iii) மிக்க நன்றி : 2018 ஆம் ஆண்டின் பங்கு மேய்ப்புப் பணி பேரவை சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைத்த பேரவை உறுப்பினர்கள் மற்றும் பணிக்குழுக்களின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. கிறிஸ்துவுக்காக சாட்சிகளாக திகழவும் இணைந்து பணியாற்றவும் முன்வருவோம்

- **<u>செபமாலை மாதத்தின் நிறைவு: 31-10-2018 (புதன்கிழமை)</u>** ஒவ்வொரு அதிச/வட்டாரங்களில் திருச்சபைக்காகவும் அதனுடைய பாதுகாப்புக்காகவும் நம் செபங்களை அன்னை மரியாளிடம் ஒப்புக்கொடுப்போம். அன்னை மரியே எங்களோடு வழி நடந்திடும். அதிதூதரான புனித மிக்கேலே எங்களுக்காக மன்றாடும்.
- **விளக்கவுரை: திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள்**
நாள்: 08-11-2018 (வியாழன்) API, K.L.
நேரம்: மாலை 7.00 - 10.00 வரை
(தொடர்பு: 03-20 26 64 66) அல்லது
இணையத்தின்வழி பதிவு https://api.ArcKL.org
- **கலாச்சாரம் மற்றும் நாட்டின் வளர்ச்சி** - கண்காட்சி - கத்தோலிக்க ஆராய்ச்சி மையம் மற்றும் யுகேஎம் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் கண்காட்சி - நாள்: 24-10-2018 (சனி) காலை 9.30 -4.00(மாலை) இடம்: டேவான் பெர்டானா, யுகேஎம், பாங்கி. நுழைவு இலவசம். தொடர்பு: 03- 20266472 அல்லது மின்னஞ்சல்: events@crc.org.my

**இன்று திருப்பலியை வழிநடத்திய** காடோங் அன்னை **வேளாங்கண்ணி சிற்றாலய அதிச வினருக்கு நமது நன்றிகள்.**

➢ **கல்லறைகள் ஆசீர்வதித்தல்**

| | | |
|---|---|---|
| 28 அக்டோபர் | மாலை 4.30 மார்ஜெரி | மாலை 5.00 சாகா |
| | மாலை 6.00 கம்போங் செபீர் | |
| 1 நவம்பர் | மாலை 4.30 தித்தி | காலை 9.00 ஃபேரி பார்க் |
| 2 நவம்பர் | மாலை 4.00 புனித மாற்கு கல்லறை | மாலை 4.30 சிகாமட் கல்லறை |
| | காலை 9.45 நீலாய் சியா என் மெமோரியல் | |

➢ **அனைத்துப் புனிதர்கள் மற்றும் அனைத்து மரித்தோர் நினைவு நாள் :**

| | | | |
|---|---|---|---|
| அனைத்து புனிதர்கள் 01-11-2018 | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | காலை 7.30 (கார்மேல் மடம்) | பகல் 2.00 (கம்போங் செபிர்) | மாலை 4.30 (தித்தி) |
| அனைத்து மரித்தோர் நினைவு நாள்: 02-11-2018 | காலை6.45 (ஆங்கிலம்) | மாலை 6.30 (ஆ/சீ/தேமொ) | மாலை 8.30 (தமிழ்) |
| | காலை 7.30 (கார்மேல் மடம்) | | |

**<u>ஏழைகளுக்கான பணிக்குழு ( ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)</u>**

- ஆன்மீக உரை - ஏழைகளின் திருச்சபை - அருட்பணியாளர் சேவியர் 03-11-2018 அனைத்து பங்கு மக்களும் இதில் கலந்து கொள்ளலாம். நேரம்: காலை 8.00-2.00 (பகல்) வரை பதிவு அனைத்து திருப்பலிகளுக்குப்பின் நடைபெறும்
- உலக ஏழையர்களின் தினம் - நவம்பர் 17 & 18, 2018 கூடுதல் விவரங்களுக்கு: ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016- 611 0681)

- **<u>கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church - CCC)</u>** நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பற்ற பரிசு. இதில் அடங்கியிருக்கும் அரிய பொக்கிஷங்களைக் கண்டுகொள்ள வாருங்கள். பங்கு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக, மறைக்கல்வி / கிபுமுக வகுப்பு ஆசிரியர்கள்/ நற்கருணைப் பணியாளர்கள்/அதிச ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைவருக்கும் உகந்த ஒரு சிறப்பு உரை: வழங்குபவர்: டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு (API Director) நாள்: 24-11-2018 (சனிக்கிழமை) நேரம்: காலை 9.00 - 4.00 வரை - பதிவு மறைக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் பதிவுக்கு இறுதி நாள்: 18-11-2018 (நுழைவு இலவசம்) தொடர்புக்கு: அந்தோணி பரம் 012- 662 0949
- அதிதூதர் மிக்கேல் அவர்களை நோக்கி செபம் - திருத்தந்தை கேட்டுக்கொண்டது போல திருச்சபைக்கும் அதன் பாதுகாப்புக்கும் செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த செப அட்டையை பெற்றுக்கொள்ளுங்கள்.
- **<u>தீபாவளிக்கான உதவிக்கரம் நீட்டும் திட்டம்</u>:** உடை தானம்- வசதி குறைந்த இந்து சகோதர சகோதரிகளுக்கு, சிரம்பான் இந்து சங்கம் உதவி செய்ய திட்டமிட்டுள்ளது. புதிய மற்றும் நல்ல நிலையில் உள்ள பயன்படுத்திய ஆடைகளை வழங்குதல்
அ) புடவை/பஞ்சாபி உடைகள்/சுரிதார்
ஆ) ஆண்களின் ஜிப்பா/குர்த்தா/வேட்டி / சட்டைகள் / கால்சட்டை/உடைகள்
தொடர்புக்கு: லெட்சுமி 011 - 10 66 39 59
- **<u>170 ஆம் ஆண்டு நிறைவு - கார்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் "</u>**புத்தகம் ஒன்றின் விலை ரிம:40.00 திருப்பலிக்குப் பின் அல்லது பங்கு அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்.